# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 118/மா/2023**

**நாள் : 09 /08/2023**

ஆ.கயல்விழி
காஞ்சிபுரம் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், காஞ்சிபுரம் மாநகராட்சி,
காஞ்சிபுரம். – எதிர்மனுதாரர்

காஞ்சிபுரம் மாவட்டம், ஓரிக்கை, அண்ணா நகர், கதவு எண்.1/387 என்கிற முகவரியில் வசிக்கும் ஆ.கயல்விழி அவர்களின் 12.01.2023 நாளிட்ட மனு 14.03.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 118/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம், ஓரிக்கை, அண்ணா நகர், கதவு எண்.1/387 என்கிற முகவரியில் வசிக்கும் ஆ.கயல்விழி அவர்கள் தனது 12.01.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நான் காஞ்சிபுரம் மாநகராட்சி காஞ்சிபுரம் 46–வது வார்டு, ஓரிக்கை எனும் பகுதியின் மாமன்ற உறுப்பினர் ஆவேன். எனது பகுதியில் பாலாறு உள்ளது. பாலாற்றின் குடிநீர் பைப்புகள் வெள்ளத்தில் பழுதடைந்து கிடந்ததை மாநகர அதிகாரிகள் ஒத்துழைப்போடு பைப்புகளை திருடிச்சென்றனர். இது குறித்து மாமன்றக் கூட்டத்தில் மனு கொடுத்துள்ளேன். இதனால் புதியதாக காஞ்சிபுரம் மாநகராட்சி –15வது மான்ய நிதி 2021–22ன் கீழ் வார்டு எண்.46ல் உள்ள பாலாறு நீர் ஊடுருவல் கிணறு முதல் நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி வரை 2,460 மீ நீளம் குடிநீர் வழங்கும் 100 மிமீ DI பிரதான குழாய் மற்றும் 1,500 மீட்டர் நீளம் கேபிள்களை மாற்றியமைக்கும் பணி (சிப்பம் II) மதிப்பீடு டெண்டர் விடப்பட்டது. ஓரிக்கை பாலாறு கிணற்றிலிருந்து கரை வரை தோராயமாக 400 மீட்டர் மட்டும்தான் புதியதாக 4 கிணற்றிலிருந்து கரை வரை பைப் புதைக்கப்படுகிறது. அதற்கான டெண்டர் மதிப்பு

ரூ.3,30,00,000/- (ரூபாய் மூன்று கோடியே முப்பது இலட்சம்) ந.க.எண்.13359/2021/இ1 ஆகும். இந்த டெண்டரை ஒப்பந்ததாரர் ஞானம் ரூ.3,30,00,000/- (ரூபாய் மூன்று கோடியே முப்பது இலட்சம்) என டெண்டர் எடுத்தார். அதன்பிறகு 11.01.2023 மதியம் சுமார் 2.45 மணியளவில் மேற்படி பகுதியில் குடிநீர் பிளாஸ்டிக் பைப்புகளை பூமிக்கு அடியில் அமைத்தனர். குடிநீர் பைப்புகள் தரமற்ற முறையில் செய்து கொண்டு இருந்ததை அறிந்து தரமற்ற முறையில் போடாதீர்கள் என்று கேட்டேன். அரசுக்கு வருவாயை இழப்பு ஏற்படுத்துவதோடு குடிநீர் விநியோகம் செய்ய பிளாஸ்டிக் பைப்புகளை முறையாக அமைக்க வேண்டும் என்று கூறினேன். உடனே வேலையை நிறுத்தி விட்டு, தகவல் கொடுத்து, மாநகராட்சி M.E., .A.E., Commissioner, மேயர் மற்றும் 10 பேர்களுடன் வந்து பார்வையிட்டனர். அப்போது இந்த முறைகேடு குறித்து, ஊழலை குறித்தும் தரமற்ற முறையில் குடிநீர் பிளாஸ்டிக் பைப்புகளை புதைக்கிறீர்கள். இது தவறானது என்று கேட்ட போது ஆணையர், M.E., A.E., ஒன்று சேர்ந்து கொண்டு இதெல்லாம் நீங்க கேட்கக்கூடாது. நாங்க எப்படி வேணுமானாலும் போடுவோம், மீறி கேட்டால் இதே ஆற்றில் உங்களை வீசி விடுவோம் என்றும் அசிங்கமான வார்த்தையால் பேசி மிரட்டினார்கள். அதோடு உடன் வந்த 10 (பத்து) நபர்கள் உன்னை பொம்பளைன்னு கூட பார்க்க மாட்டோம். அடித்தே கொன்று விடுவோம் என்று மிரட்டி அங்கிருந்து துரத்தினார்கள். நான் அவர்களுக்கு பயந்து அங்கிருந்து சென்று விட்டேன். மேலும் இதுகுறித்து என்னிடம், M.E., A.E., ஒப்பந்ததாரர் ஞானம் ஆகியோர்கள் ஆணையர் உங்களிடம் ரூ.3,30,00,000/- (ரூபாய் மூன்றுகோடியே முப்பது இலட்சம்) டெண்டரை பற்றி சுமூகமாக பேசி முடிக்கச்சொன்னார் என்று தனியாக அழைத்து என்னிடம் ரூ.3,00,000/- (மூன்று இலட்சம்) பேரம் பேசி இதோடு இந்த பிரச்சினையை விட்டு விடுங்கள். சமாதானமாக போய் விடலாம் என்று பணத்தை காண்பித்து பெற்றுக்கொள்ளுங்கள் என்றார்கள். நான் வாங்க மறுத்து விட்டேன். மாநகர ஆணையர், M.E., A.E., ஒப்பந்ததாரர் ஞானம் ஆகியவர்கள் ஒன்று சேர்ந்து கொண்டு மாநகராட்சியில் உள்ள அரசாங்க வரிப்பணத்தை கொள்ளை அடிப்பதோடு, கமிசன் வாங்கிக்கொண்டு வேண்டப்பட்ட ஒப்பந்ததாரரிடம் கொடுத்தும் ஊழல் செய்து வருகிறார்கள்.

ஆகவே அய்யா அவர்கள் மேற்படி புகாரைப்பெற்று மாநகர ஆணையர், ME கணேசன், AE உலகநாதன் ஒப்பந்ததாரர் ஞானம் ஆகியவர்கள் அரசாங்க பணத்தை முறைகேடு செய்தும் ஊழலில் ஈடுபட்டும், அசிங்கமாக பேசி ஆற்றில் வீசி விடுவோம் என்று மிரட்டி வரும் நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் பாலாற்றில் பூமியில் புதைக்கும் பைப்புக்கு ஒரு பைப்புக்கு ஜல்லி, சிமெண்ட், மணல் கலந்து புதைப்பதற்கு ரூ.1,300 மட்டுமே ஆகிறது. 2,000 பைப்புகள் புதைத்தால் ரூ.26 இலட்சம் மட்டுமே ஆகும். மேலும் DI பிரதான குழாய் 1,500 மீட்டர் நீளம் அமைக்க இவ்வளவு தொகையா ? கோடிக்கணக்கில் டெண்டர் விடப்பட்டு மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தி, ஊழல் நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது." என்று தெரிவித்துள்ளார்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 10.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3. காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் தனது 03.07.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

" காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட செவிலிமேடு தேனம்பாக்கம், ஓரிக்கை (வார்டு எண்.38,42,43,44,45,46,47,48,49,50,51) ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம்

செய்யும்பொருட்டு பாலாற்றின் நடுவில் 15 நீர் உறிஞ்சு கிணறுகள் அமைத்து PVC குழாய்களின் மூலம் தண்ணீர் எடுத்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 2021ஆம் ஆண்டு பெய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கின் காரணத்தால் ஆற்றுப்படுகையில் பயன்பாட்டில் இருந்து வந்த PVC குழாய்கள் மற்றும் கேபிள்கள் மழை வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்டு, குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டது எனவும் இதனைத்தொடர்ந்து நிரந்தர தீர்வு காணும் பொருட்டு 2021–22 ம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்யம் (Tied Grant) திட்டத்தின் கீழ் DI பம்பிங் மெயின் மற்றும் கேபிள் பதிக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது நிர்வாக அனுமதியின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு சிப்பம்–I ல் ரூ.98.00 இலட்சம் (ஒப்பந்ததாரர் திருவாளர். NPG Brothers) சிப்பம் II ல் ரூ.97.00 இலட்சம் (ஒப்பந்ததாரர் திருவாளர் NPG.Brothers) மற்றும் சிப்பம் IIIல் ரூ.94.00 இலட்சம் (ஒப்பந்ததாரர் திருவாளர் NPG Brothers) ஆகிய பணிகள் நடைபெற்று வருகிறது என்றும் மேலும் (Untied Grant) சிப்பம் IVல் 80.00 இலட்சம் (ஒப்பந்ததாரர் திருவாளர் VTN Groups) சிப்பம் Vல் 80.00 இலட்சம் (ஒப்பந்ததாரர் திருவாளர் VTN Groups). சிப்பம் VIல் –40.00 இலட்சம் (ஒப்பந்ததாரர் திருவாளர். இளங்கோ எலக்ட்ரிகல்ஸ்) ஆகிய பணிகளும் நடைபெற்று வருகிறது என தெரிவித்துள்ளார்.

மேற்கண்டவாறு நடைபெறும் பணிகளில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சிப்பம் IIல் ரூ.97.00 இலட்சம் மதிப்பீட்டில் "வார்டு எண்.46ல் பாலாறு நீர் ஊடுருவல் கிணறு முதல் நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிவரை பிரதான குழாய்கள் மற்றும் கேபிள்களை மாற்றியமைக்கும் பணி ஒப்பந்ததாரர் திருவாளர்.NPG Brothers என்பவர் மூலம் மேற்கொள்ளப்படும் பணியின் முன்னேற்றம் குறித்து பொறியியல் பிரிவு அலுவலர்களால் அவ்வப்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது என்றும் மேற்படி பணியின் மதிப்பீட்டில் பம்பிங் மெயின் பதிக்கும் பொருட்டு 100mm DI pipe PN-10 (DF) மற்றும் Anchorage பணிக்காக 110 mm O/D PVC pipe ஆகியன வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் 2023ம் ஆண்டு பொங்கல் பண்டிகை முன்னிட்டு பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க வேண்டுமாய் சட்டமன்ற உறுப்பினர், மாமன்ற மேயர், மண்டல தலைவர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்ததின் பேரில் மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரரின் ஆட்களைக்கொண்டு, ஏற்கனவே வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்ட கேபிள் மற்றும் PVC குழாய்கள் சிதிலமடைந்துள்ளதை சீர் செய்து, தற்காலிகமாக குடிநீர் வழங்கும் பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் திருமதி.ஆ.கயல்விழி, 46–வது வார்டு மாமன்ற உறுப்பினர், தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளபடி இப்பணிகளில் எங்கும் PVC பைப்புகள் பயன்படுத்தப்படவில்லை. 11.01.2023ம் நாளன்று சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.NPG Brothers மூலம் Anchorage பணிக்காக மட்டும் 110mm O/D PVC pipe பைப்புகள் பயன்படுத்தப்பட்டது. ஒப்பந்ததாரர் மூலம் 19.01.2023 அன்று ஒரிக்கை பகுதியில் DI pipe சப்ளை செய்யப்பட்டு தற்போது DI pipe பதிக்கும் பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது. மேலும் இப்பணியினை மாநகராட்சி பகுதிகளில் உள்ள தொழில்நுட்ப கல்லூரிகள் மூலம் கள ஆய்வு செய்து மதிப்பீட்டின்படி உபயோகப்படுத்தப்படும் சிமெண்ட், சரளை மண், (M.sand) 20mm ஜல்லி, இரும்பு கம்பிகள் PVC குழாய்கள், DI குழாய்கள், கேபிள்(ம) இதர உதிரிபாகங்கள் ஆகியவற்றின் தொழில்நுட்ப விவரங்கள் குறித்து தரச்சான்று (ம) மூன்றாம் தரப்பு ஆய்வறிக்கை (Third Party Inspection) பெற்று அதன் பின்னரே ஒப்பந்ததாரருக்கு பட்டியல்தொகை வழங்கப்படுகிறது.

மனுதாரர்/மாமன்ற உறுப்பினர் மற்றும் அவரது தரப்பு ஆட்கள் இப்பணி நடைபெறும்போது பணியினை நிறுத்தக்கூறியதின் பேரில், மாமன்ற உறுப்பினர் மற்றும் அவரது ஆட்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் ஒப்பந்ததாரர் புகார் கடிதம் அளித்துள்ளார். இம்மனுவின்மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், ஒப்பந்ததாரர் (ம) பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கக்கோரியும் காவல் ஆய்வாளர், தாலுக்கா காவல் நிலையம், காஞ்சிபுரம் அவர்களுக்கு 11.01.2023ம் தேதியன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாகவே புகார் மனு வரப்பெற்றுள்ளது. இப்புகார் மனுவின் மீது மேற்கண்டவாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28, முதன்மை செயலாளர், தலைமைச்செயலகம், சென்னை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்களுக்கும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் விவரங்களின்படி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மூலம் பெறப்பட்டுள்ள புகார் மனுவில் தெரிவித்துள்ளவை அனைத்தும் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை எனவும், உரிய விதிமுறைகளின்படியே திட்டப்பணி நடைப்பெற்று வருகிறது " என தெரிவித்துள்ளார்.

**4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 01.08.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 25.07.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5. மனுதாரர் 01.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:**

" நான் காஞ்சிபுரம் மாநகராட்சியில் 46–வது வார்டு உறுப்பினராக உள்ளேன். காஞ்சிபுரம் மாநகராட்சியில் 15வது மானிய நிதி 2021–22ன் எனது வார்டில் உள்ள பாலாற்று நீர் ஊடுருவல் கிணறு முதல் நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை குடிநீர் குழாய் பதிக்கும் பணிக்கு ரூபாய் 3 கோடியே 30 லட்சம் மதிப்பீட்டில் அதாவது காஞ்சிபுரம் மாநகராட்சி 46வது வார்டில், ரூபாய் 97 லட்சம் மதிப்பீட்டில் 2,460 மீட்டர் நீளத்திற்கும், 45வது வார்டில், 98 லட்சம் மதிப்பீட்டில் 2,460 மீட்டர் நீளத்திற்கும், 47 மற்றும் 49வது வார்டில் 94 லட்சம் மதிப்பீட்டில் 2,340 மீட்டர் நீளத்திற்கும், 50வது வார்டில், 48லட்சம் மதிப்பீட்டிலும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனது வார்டில் 2,460 மீட்டர் நீளத்தில் குழாய் பதிக்கும் பணிகள் 97 லட்சம் ரூபாயில் பணிகள் நடைபெற்றுள்ளன. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ரூபாய் 30 லட்சம் மட்டுமே செலவாகும். ஆனால் செலவு ரூபாய் 97 லட்சம் என காஞ்சிபுரம் மாநகராட்சியால் கணக்கு காட்டி வருகின்றனர். மேலும், மேற்கண்ட 2,460 மீட்டர் நீளத்தில் வெறும் 265 மீட்டருக்கு மட்டுமே குழாய் போடப்பட்டுள்ளது. ஆனால் 2,460 மீட்டர் நீளத்திற்கும் குழாய் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து பெரும் முறைகேடு செய்துள்ளனர். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக எவ்வளவு மதிப்பீடு, இதுவரை ஒப்பந்ததாரருக்கு அளித்த தொகை போன்ற விவரங்களை மாநகராட்சி மேயர் மற்றும் ஆணையர் ஆகியோரிடம் வாய்மொழியாக கோரியபோதும் எவ்வித பதிலும் என்னால் பெறப்படவில்லை.

மேற்படி பகுதியில் அமைக்கும் குடிநீர் குழாய்கள் தரமற்ற முறையிலும் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் வகையிலும் முறைகேடாக பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, ரூ.30 லட்சத்தில் முடிய வேண்டிய பணிகளை ரூ.3 கோடியே 30 லட்சத்தில் முடிப்பதற்கு ஒப்பந்தம்

ஏற்படுத்தப்பட்டு முறைகேடான வகையில் பணிகளை மேற்கொண்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறைமன்றத்திற்கு என்னால் அனுப்பப்பட்ட 12.01.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6. காஞ்சிபுரம் மாநகராட்சியின் மாநகரப்பொறியாளர் 01.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்:**

" காஞ்சிபுரம் மாநகராட்சியில் 2021–22ம் நிதியாண்டில் 15வது நிதிக்குழு மான்யத்தின் மூலம் காஞ்சிபுரம் பாலாற்றில் குடிநீர் விநியோக நீரேற்றுக்குழாய்கள் ஆற்று வெள்ளத்தில் அடித்து செல்லாத வகையில், ரூபாய் 3.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கண்ட பணிகள் 5 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, 3 நிறுவனங்களுக்கு பணிகள் வழங்கப்பட்டன. மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஓரிக்கை பகுதியில் 2,460 மீட்டர் நீளத்திற்கு ரூபாய் 97 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள NPG Brothers என்கின்ற நிறுவனத்திற்கு பணிகளை மேற்கொள்ள பணியாணை வழங்கப்பட்டது. மேற்கண்ட 2,460 மீட்டர் நீளத்தில், 610 மீட்டர் நீளத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. மீதம் 1,850 மீட்டர் நீளத்திற்கு குழாய்கள் பதிக்கப்படவுள்ளது. பணிகள் மேற்கொண்ட வகையில், ஒப்பந்ததாரருக்கு ரூபாய் 25.65 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட ஒப்பந்ததாரரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ஒப்பந்த காலமான ஒரு வருட காலம் முடிந்துவிட்ட நிலையில், 3 சிப்பப்பணிகள் முடிவுற்ற நிலையில், இன்னும் 2 சிப்பப்பணிகள் முடிக்கப்படவில்லை. பணிகளை முடிக்காத ஒப்பந்ததாரர்களுக்கு கால நீட்டிப்பு (Extension of time) மாநகராட்சியால் இன்னும் அளிக்கப்படவில்லை. மேற்கண்ட பணிகள் தொடர்பான அளவீட்டு புத்தகம் (M Book) இம்முறைமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. நிலுவையில் உள்ள மேற்கண்ட இரண்டு பணிகளும் மூன்று மாதகாலத்திற்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டு இறுதி அறிக்கை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

மேலும் காஞ்சிபுரம் மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் 5 சிப்பப் பணிகளுக்கான மதிப்பீட்டுத்தொகை, முடிக்கப்பட்ட பணிகள், நிலுவையில் உள்ள பணிகள், ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட தொகை போன்ற விவரங்களை (Abstract) இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் இம்முறைமன்றத்தில் என்னால் அளிக்கப்படும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் 31.07.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளுமபடி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**7. காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளர் தனது 31.07.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:**

" காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட செவிலிமேடு தேனம்பாக்கம், ஓரிக்கை (வார்டு எண்.38,42,43,44,45,46,47,48,49,50,51) ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும்

பொருட்டு பாலாற்றின் நடுவில் 15 நீர் உறிஞ்சு கிணறுகள் அமைத்து PVC குழாய்களின் மூலம் தண்ணீர் எடுத்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 2021ம் ஆண்டு பெய்த கனமழை மற்றும் பாலாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக பயன்பாட்டில் இருந்து வந்த PVC குழாய்கள் மற்றும் கேபிள்கள் அனைத்தும் ஆற்று வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டதால் பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டது.

வருங்காலங்களில் இவற்றினை தவிர்த்திடும்பொருட்டும் நிரந்தர தீர்வு காணும் வகையில் 2021–22ம் நிதியாண்டில் 15வது நிதிக்குழு மான்யம் (Tied and Untied Grant) திட்டத்தின் கீழ் பாலாற்றில் குடிநீர் விநியோக நீரேற்று குழாய்கள், உறுதியுடன் ஆற்று வெள்ளத்தில் அடித்துச்செல்லாத வகையில் நிரந்தரமாக தாங்கக்கூடிய வகையில் DI K9 திறன் கொண்ட நீரேற்று குழாய்களை ஆற்றின் மையப்பகுதியில் வெவ்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் உறிஞ்சும் கிணற்றிலிருந்தும் குடிநீர் சேகரிப்பு கிணற்றிலிருந்தும் நகரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் ஆகியவற்றிற்கு குழாய்கள் பதிக்கும் பணிக்கு மொத்தமாக 2,480 மீ நீள 100 mm DI K9 திறன் கொண்ட குழாய்கள் மற்றும் அதற்கான மின்சார கேபிள்கள் 1,500 மீ நீளத்திற்கு (LT UG cable) பதிக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு இப்பணிக்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் வழிவகை செய்யப்பட்டது.

இத்திட்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 24.06.2022ல் கோரப்பட்டதன் பேரில் சிப்பம்–1 மதிப்பீடு ரூ.98.00 இலட்சம் பணிக்கு திருவாளர் NPG Brothers அவர்களால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டது.

சிப்பம் –II மதிப்பீடு ரூ.97.00 இலட்சம் பணிக்கு திருவாளர் NPG Brothers அவர்களால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டது.

சிப்பம் –III மதிப்பீடு ரூ.94.00 இலட்சம் பணிக்கு திருவாளர் NPG Brothers அவர்களால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டது.

சிப்பம் –IV மதிப்பீடு ரூ.80.00 இலட்சம் பணிக்கு திருவாளர் VTN Groups அவர்களால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டது.

சிப்பம் –V மதிப்பீடு ரூ.80.00 இலட்சம் பணிக்கு திருவாளர் VTN Groups அவர்களால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டது.

சிப்பம் –VI மதிப்பீடு ரூ40.00 இலட்சம் பணிக்கு திருவாளர் இளங்கோ எலக்ட்ரிகல்ஸ் அவர்களால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டது.

குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்த நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி மன்ற தீர்மானத்தின் மூலம் ஏற்கப்பட்டது. காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை பணிஉத்தரவு 27.06.2022ல் வழங்கப்பட்டுள்ளது.

திருமதி.ஆ.கயல்விழி, மாமன்ற உறுப்பினர் புகார் அளித்துள்ள சிப்பம் IIல் ரூ.97.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.46ல் பாலாறு நீர் ஊடுருவல் கிணறு முதல்

நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி வரை குடிநீர் வழங்கும் பிரதான குழாய்கள் மற்றும் கேபிள்களை மாற்றியமைக்கும் பணியினை ஒப்பந்ததாரர் திருவாளர் NPG Brothers என்பவர் மூலம் மேற்கொள்ளப்பட்டபோது பணியினை மேற்கொள்ளாதவாறு பணி தளத்தில் திருமதி. ஆ.கயல்விழி, மாமன்ற உறுப்பினர் மற்றும் அவரது கணவர் ஆகிய இருவரும் பணியினை செய்யவிடாமல் தகராறு செய்ததாக ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் 03.10.2022 மற்றும் 07.01.2023 தேதிகளில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

திட்டப்பணிக்கான மதிப்பீட்டினை நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளரால் அளிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அனுமதியில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் இப்பணியானது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை மாநகராட்சி உதவி பொறியாளர் அவர்களின் நேரடி பார்வையிலும் மாநகர பொறியாளருடைய கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தலைமை பொறியாளரால் நியமிக்கப்படும் தலைமை நிலைய பொறியாளரின் கள ஆய்வு மற்றும் Accredited with 'A' Grade by NAAC தகுதிவாய்ந்த பொறியியல் கல்லூரி நிறுவனத்தின் ஆய்வு மற்றும் தரச்சான்று பெறப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்காக பயன்படுத்தப்பட்ட பொருட்கள் அனைத்தும் தகுதியான தர கட்டுப்பாட்டு மையத்தின் மூலம் தரத்தினை ஆய்வு செய்யப்பட்டும் மற்றும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரிய பொருட்கள் ஆய்வகம் (Tamil Nadu Water Supply and Drainage Board Material Testing Laboratory, Tindivanam ) திண்டிவனத்தில் மேற்படி திட்டப்பணிக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் குறித்த தரத்தினை ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிக்கான மூன்றாம் தரப்பு ஆய்வக அறிக்கை பெறப்பட்டுள்ளது.

மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு ஏதுவாக பொதுப்பணித்துறையினரால் அவ்வப்போது வெளியிடப்படும் செந்தர விலைப்பட்டியல், குடிநீர்வடிகால் வாரியத்தால் செந்தர விலைப்பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தின் அடிப்படையில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளரால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, மேற்படி மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள விலைவிகித அடிப்படையிலேயே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

மேற்படி திட்டப்பணியானது ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் போது குழாய்கள் மற்றும் மின்சார கேபிள்கள் அடித்துச்செல்லாவண்ணம் 'இருக்க தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு DI K9 குழாய் பதிக்கப்படுகின்றன.

பொதுமக்களின் குடிநீர் ஆதார பணி என்பதால் திட்டப்பணி முடிவு பெறும் காலம் வரை மாற்று ஏற்பாடாக ஆற்றில் அடித்து சென்ற பழைய PVC குழாய்களை இணைப்பு செய்து பொதுமக்களுக்கு பொங்கல் திருவிழாவிற்கு முன்னதாக தடையின்றி குடிநீர் வழங்க இம்மாற்று ஏற்பாடு பணி மேற்கொள்ளப்பட்டது.

சிப்பம் II பணிகள் குழாய் பதிப்பு மதிப்பீடு ரூ.97.00 இலட்சமாகும். ஆனால் புகார்தாரரால் ரூ.330.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாக தவறாக தெரிவிக்கப்பட்டது.

சிப்பம் IIன் மதிப்பீட்டில் கண்ணிகாபுரம் அண்ணா குடியிருப்பு, சின்னய்யன் குளம் இந்திரா நகர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்திட பாலாற்றில் ஓரிக்கை மற்றும் செவிலிமேடு பகுதியில் அமைந்துள்ள நீர் உறிஞ்சும் கிணற்றிலிருந்து குடிநீர் பிரதான குழாய் சுமார் 2,460 மீ நீளத்திற்கு அமைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கான நேரடி தள ஆய்வு மேற்கொண்டு பெறப்பட்ட மூன்றாம் தரப்பு சான்றிதழ் அடிப்படையில் மட்டுமே பில் பட்டியல் வழங்கப்பட உள்ளது. மேற்படி புகாரில் எவ்வித முறைகேடுகளும் இல்லை. எனவே இப்புகார் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8. இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம், காஞ்சிபுரம் மாநகராட்சி பொறியாளரின் வாக்குமூலம், ஆணையரின் அறிக்கை மற்றும் ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் காஞ்சிபுரம் மாநகராட்சி 45, 46,47, 49 மற்றும் 50வது வார்டில் பாலாற்று நீர் ஊடுருவல் கிணறு முதல் நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிவரை குடிநீர் குழாய் பதிக்கும் பணியில் முறைகேடு நடந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாநகராட்சியில், செவிலிமேடு, தேனம்பாக்கம், ஓரிக்கை (வார்டு எண்கள்.38,42,43,44,45,46,47,48,49, 50,51) ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு பாலாற்றின் நடுவில் 15 நீர் உறிஞ்சு கிணறுகள் அமைத்து PVC குழாய்களின் மூலம் தண்ணீர் எடுத்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது எனவும் கடந்த 2021ஆம் ஆண்டு பெய்த கனமழை மற்றும் பாலாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக பயன்பாட்டில் இருந்து வந்த PVC குழாய்கள் மற்றும் கேபிள்கள் அனைத்தும் ஆற்று வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டதால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டும், நிரந்தர தீர்வாகவும் இருக்க 2021–2022ம் நிதியாண்டில் 15வது நிதிக்குழு மான்யம் (Tied and Untied grant) திட்டத்தின்கீழ் பாலாற்றில் குடிநீர் விநியோக நீரேற்று குழாய்கள் உறுதியுடன் ஆற்று வெள்ளத்தில் அடித்துச்செல்லாத வகையில் நிரந்தரமாக தாங்கக்கூடிய வகையில் DI K9 திறன் கொண்ட நீரேற்று குழாய்களை 2,480 மீ நீளத்திற்கு 100mm மற்றும் அதற்கான மின்சார கேபிள்கள் 1,500 மீ நீளத்திற்கு (LT UG CABLE) பதிக்கும் பணிக்கு மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப்பொறியாளரால் அளிக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்ப அனுமதியின் அடிப்படையில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், தலைமைப்பொறியாளரால் நியமிக்கப்பட்ட தலைமை நிலைய பொறியாளரின் கள ஆய்வு மற்றும் Accredited with "A" Grade by NAAC தகுதிவாய்ந்த பொறியியல் கல்லூரி நிறுவனத்தின் ஆய்வு மற்றும் தரச்சான்றும் பெறப்பட்டுள்ளது என்றும் மேலும் இப்பணிக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் அனைத்தும் தகுதியான தரகட்டுப்பாட்டு மையத்தின் மூலம் தரத்தினை ஆய்வு செய்யப்பட்டும் மற்றும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரிய பொருட்கள் ஆய்வகம்(TamilNadu Water Supply and Drainage Board Materials Testing Laboratory, Tindivanam) மூலம் தரம் ஆய்வும் செய்யப்பட்டுள்ளது என்றும் அறியப்படுகிறது. மேற்கண்ட பணிகள் ஒப்பந்த காலமான ஒரு வருடகாலம் முடிந்துவிட்ட நிலையில் 3 சிப்பப்பணிகள் முடிவுற்றும், மீதி 2 சிப்பப்பணிகள் முடிக்கப்படவில்லை எனவும் பணிகளை முடிக்காத ஒப்பந்ததாரர்களுக்கு கால நீட்டிப்பு

(Extension of time) மாநகராட்சியால் இப்பொருள் குறித்த விசாரணை இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நாளதுவரை அளிக்கப்படவில்லை என்பதும் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மாநகராட்சி மாநகரப்பொறியாளர் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது. எனவே, காஞ்சிபுரம் மாநகராட்சி மாநகரப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு நிலுவையிலுள்ள இரண்டு பணிகளை 3 மாதத்திற்குள் நிறைவுசெய்யவும், அதன் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும், மனுதாரர் இந்தப்பணியில் முறைகேடு நடந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளதால் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் தலைமைப்பொறியாளர் அளவில் ஒரு குழு அமைத்து மேற்கண்ட பணி தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு செய்யப்பட்டுள்ள பணிகள் தரமாக நடந்துள்ளனவா, முறைகேடுகள் ஏதேனும் நடைபெற்றுள்ளதா என்பதை உறுதிபடுத்திடவும் ஆய்வின்போது ஏதாவது முறைகேடுகள் நடைபெற்றுள்ளது கண்டறியப்பட்டால் அதற்கு காரணமாக இருந்துள்ள சம்பந்தப்பட்டுள்ள காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலர்கள மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The allegations have been raised against the Local Body officials by a sitting member of the Corporation Council. The explanation of the official who appeared before the Forum and his deposition are not fully convincing. Hence the D.M.A. is directed to entrust the task of inspection of the pipe line laying work at a cost of Rs.3.30 Crores with the Chief Engineer who had accorded sanction with detailed conditions in 2022 to ensure that there are no violations and deviations from the stipulated conditions in his proceedings dated 20.05.2022.

An action taken report shall be sent to this Forum within the next 45 days. The Director, Local Fund Audit is directed to examine the Tender papers, Bills, vouchers involved in this issue after the completion of the work.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி. ஆ.கயல்விழி,
   மாமன்ற உறுப்பினர்,
   எண்.1/387, அண்ணா நகர்,
   ஒரிக்கை,
   காஞ்சிபுரம் – 631 502.

2. ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி.
காஞ்சிபுரம்

3. அரசு கூடுதல் தலைமைச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை,
தலைமைச்செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை – 600 009.

4. மாண்புமிகு முதலமைச்சரின் செயலர் –2,
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம்,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

5. நகராட்சி நிர்வாக இயக்குநர்
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜாஅண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

6. இயக்குநர்,
உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை – 600 028.

7. இணைஇயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜாஅண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இகோ/உதிரிகள்

// ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
11.8.22